கிணத்துக்கடவு (தேர்வு நிலை) பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 6 வது அழைப்பு**

ந.க.எண்.14/2022 நாள்.26.04.2022

கோயம்புத்தூர் மாவட்டம் கிணத்துக்கடவு பேரூராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் டைய்டு மானியம் முதல் தவணை நிதித் திட்டம் 2021-2022ன் கீழ் பணிகள் மேற்கொள்ள தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் கிணத்துக்கடவு பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 05.05.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின்மீது எந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2022 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை, விற்பனை வரி மற்றும் டெண்டர் டெபாசிட் ஆகியவை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை பேரூராட்சி அலுவலகத்தில் 04.05.2022 வியாழக்கிழமை மணிக்குள் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட நமூனா தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை , ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை , சால்வன்சி தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**15வது நிதிக்குழு திட்டம் 2021–2022**

| வ. எண். | வேலையின் பெயர் | சிப்பம் | எண்ணிக்கை / அளவு | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (மதிப்பீட்டு தொகையில் 1%) ரூபாயில் | ஷெட்யூல் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| 1 | கிணத்துக்கடவு பேரூராட்சி வார்டு.4 ஆர்.எஸ்.ரோடு, வார்டு 1 கிருஷ்ணசாமிபுரம் மற்றும் வார்டு.9 சிங்கராம்பாளையம் சமுதாய கழிப்பிடங்கள் சிறப்பு பழுது பார்த்தல். | 2 | 1 | 5.40 | 5400/. | ரூ.1500+ (GST) |
| 2 | கிணத்துக்கடவு பேரூராட்சி வார்டு.11 கல்லாங்காட்டுபுதூர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி பழைய கிணறு வரை பைப்லைன் விஸ்தரித்தல் | 2 | 1 | 4.40 | 4400/. | ரூ.750 + (GST) |

மதிப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-ற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பம் உள்ளவர்கள் கீழ்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமூனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி - http://www.tenders.tn.gov.in

ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

(ஒம்) ********
தலைவர்
கிணத்துக்கடவு பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

(ஒம்) ********
செயல் அலுவலர்
கிணத்துக்கடவு பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

// உண்மை நகல் //

26/4/2022

செயல் அலுவலர்
கிணத்துக்கடவு பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்